# புதிய ஏற்பாட்டு சபை

# கோல்மன் ஓவர்பை

இந்தப் புத்தகத்தின் பின்வரும் பகுதி, சாதாரணமாக வழங்கப்படும் விதத்திலிருந்து வித்தியாசமானதாகக் கொடுக்கப்பட்டிருப்பதை தயவு செய்து கவனியுங்கள். வாசிப்பவர்களுக்கு கேள்விகள் கேட்கும் விதமான வரைக்குறிப்பு முறையை உபயோகிக்கத் தேர்ந்தெடுக்கும்போது, ஆசிரியர் இரண்டு விதமான குறிக்கோள்களை நிறைவேற்றியிருக்கிறார்: வாசிப்பவர் ஒவ்வொரு பாடத்தையும் முழுமையாகவும், சிந்தனையோடும் படித்து கடந்து செல்ல வழிகாட்டவும், மற்றும் அதே சமயம் இந்தப் பாடங்களை மற்றவர்களுக்குப் போதிப்பதற்காக போதிப்பவருக்கு உதவக் கூடிய கேள்விகளை வழங்குவதுமாகும். புதிய ஏற்பாட்டு சபையைக் குறித்த இந்தப் பாடங்கள் உங்களுக்கு நன்மை பயக்கக் கூடியதாகவும் இன்பம் அனுபவிக்கக் கூடியதாகவும் இருக்கும் என்று நாங்கள் நம்புகிறோம்.

# 1

## சபை:

# இதன் தனிச்சிறப்பு

## இது என்னவாக இருப்பதில்லை

**1. இது பொருட்களால் ஆன கட்டிடம் அல்ல என்று நீங்கள் எவ்விதம் அறிகின்றீர்கள் (அப். 7:48; 17:24)?**

அ. சபைக்கு என்ன உண்டாயிற்று (அப். 5:11)? ஒரு கட்டிடம் பயப்பட முடியுமா?

ஆ. சபையின் காதுகளுக்கு வந்த விஷயம் என்ன (அப். 11:22)? ஒரு கட்டிடம் இவ்விதமான உறுப்புக்களைக் கொண்டிருக்க முடியுமா?

(1.) பிறகு ஏன் கூடிவரும் அறையை "கிறிஸ்துவின் சபை" என்று அழைக்கின்றனர்? ஆகுபெயர் என்பதினால், "ஒரு வார்த்தைஉணர்த்தும் இன்னொரு வார்த்தையை ஒரு உருவக உரையில் இடுதல்; ஒரு நல்ல மேஜை (அதாவது ஒரு நல்ல உணவு) என்பது போல."

(2.) உண்மையில், கிறிஸ்து ''பாத்திரத்திற்காக'' நன்றி செலுத்தினாரா (1 கொரி. 11:25)? "பாத்திரமா" அல்லது அதில் இருந்த திராட்ச ரசமா? எதை அவர் ஆசீர்வதித்தார் அல்லது நன்றி கூறினார்?

(3.) கூடிவரும் வீடு சபை என்று நேரடியாக அர்த்தப்படுகின்றதா? அல்லது சபை என்பது தான் கூடிவரும் வீட்டிற்குச் செல்லுகின்றதா?

**2. சபை என்பது ஞானஸ்நானம் பெற்ற விசுவாசிகளின் கூட்டமாகத் தான் இருக்க வேண்டுமென்று அவசியம் இல்லை. ஏன்?**

அ. யோவானால் ஞானஸ்நானப்படுத்தப்பட்ட திரளான கூட்டம் பற்றி விவரிக்கவும் (மத். 3:5, 6)
ஞானஸ்நானம் பெற்ற இவர்களில் எவரும் சபை அல்லது இராஜ்யத்தில் இருக்கவில்லை என்று காண்பிக்கவும் (மத். 3:2; 11:11).

ஆ. மேலும், யோவானைக் காட்டிலும் அதிகமானவர்களைச் சீஷராக்கி ஞானஸ்நானப்படுத்தியது யார் (யோவா. 4:1, 2)? அப்பொழுது ஞானஸ்நானம் பெற்றவர்கள் சபையின் உறுப்பினர்களாயிருந்ததில்லை என்று நிரூபிக்கவும் (மத். 4:17; 16:18).

(1.) சபையின் உறுப்பினர்கள் யாவரும் ஞானஸ்நானம் பெற்ற விசுவாசிகளாய் இருந்தார்களென்று நிரூபிக்கவும் (1 கொரி. 12:13, 27).

(2.) யோவானாலும் இயேசுவாலும் ஞானஸ்நானம் பெற்றவர்களில்

*எவரும் சபையில் உறுப்பினர்களாய் இராதது ஏன்? அப்பொழுது சபை நிலைநாட்டப்பட்டிருக்கப்படவில்லை; அது தயாரிப்பு நிலையிலேயே இருந்தது.*

## இது என்னவாக இருக்கின்றது

1. ***சபை என்பது எந்தக் கருத்தில் ஒரு சபைக் குழுமமாக அல்லது மக்களின் கூடுகையாக உள்ளது?***
   *''சபைக் குழுமம்'' என்பது மூன்று வார்த்தைகளில் இருந்து வருகின்றது: சேகரிக்க என்பதற்கான Con* plus *gregare மற்றும் ஒரு மந்தை என்பதற்கான grex என்ற வார்த்தைகள். ஆகவே இது ஒன்றுகூடுதல், சபை கூடுதல் என்று அர்த்தப்படுகின்றது.*
2. ***"சபை" என்ற வார்த்தையை விளக்கப்படுத்தவும்.***
   *இது* ekklesia *என்ற கிரேக்க வார்த்தையிலிருந்து வருகின்றது; மற்றும் இது வெளியே என்று அர்த்தப்படும்* ek *என்ற வார்த்தையிலிருந்தும் அழைக்க என்று அர்த்தப்படும்* kaleo *என்ற வார்த்தையிலிருந்தும் வருகின்றது. இது ''வெளியே அழைக்கப்பட்டவர்கள்" என்று அர்த்தப்படுகின்றது.*
   - *அ. இந்த வார்த்தை எப்பொழுதுமே மதரீதியான அர்த்தத்தில் பயன் படுத்தப்பட்டதா?*
     *இல்லை, அப். 19:32ன் கூட்டம் என்பது ekklesia என்ற வார்த்தையிலிருந்து வருகின்றது, மற்றும் அங்கு, இது கலகம் செய்த கும்பல் ஒன்றைக் குறிக்கின்றது.*
   - *ஆ. ''வெளியே அழைக்கப்பட்டவர்கள்" என்ற கருத்தில் எந்த ஒரு கூட்டமும் சபையாய் இருக்காதா?*
   - *இ. எனவே அழைக்கப்பட்ட எந்த ஒரு கூட்டத்திற்கும் மற்றும் சபைக்கும் இடையில் உள்ள வேறுபாடுகளைக் கூறவும்.சபை என்பது சுவிசேஷத்தினால் வெளியே அழைக்கப்பட்டுள்ளது (2 தெச. 2:13, 14), கிறிஸ்தவர்களின் கூடுகை தேவனை ஆராதிப்பதற்காக நடைபெற்றது (அப். 20:7).*
   - *ஈ. "வெளியே அழைக்கப்பட்டவர்கள்" என்பது, எதிலிருந்து மற்றும் எதற்குள் ஒருவர் அழைக்கப்படுகின்றார் (1 பேது. 2:9அ)?*
   - *உ. சபையைப் பொறுத்தமட்டில், உலகத்தோடு உள்ள உறவுமுறை என்ன (1 யோவா. 2:15)?*
     - *(1.) உலகத்தில் உள்ளவைகள் என்ன? தேவனால் உண்டானவைகளல்ல,ஆனால் எதினால் உண்டானவைகள் (1 யோவா. 2:16)?*
     - *(2.) உலகத்திற்கு என்ன நேரிடும்? ஆனால் வெளியே அழைக்கப் பட்டவர்களைப் பற்றி என்ன (1 யோவா. 2:17)?*

## சபையின் வசன ரீதியான சில குறிப்புப் பெயர்கள்

1. ***குடும்ப உறவின் வகையில், சபை என்னவாக உள்ளது (1 தீமோ. 3:15)?***

*அ. இந்த வீட்டில் தந்தையாய் இருப்பவர் யார்? (ரோமர் 8:16ஆ)?*

*ஆ. இந்த வீட்டில், குடும்ப உறுப்பினர்களாய் இருப்பவர்கள் யார் (ரோமர் 8:17அ)?*

***2. தேவனுடைய வாசஸ்தலத்தைப் பொறுத்தளவில், சபை என்னவாக இருக்கின்றது (1 கொரி. 3:16)?***

*அ. இந்த சபையாகிய ஆலயத்தில், உறுப்பினர்கள் என்னவாக உள்ளனர் (1 பேது. 2:5அ)?*

*இந்த ஜீவனுள்ள கற்கள் ஒன்றாகக் கட்டப்பட்டுள்ளது ஏன் (1 பேது. 2:5ஆ)?*

*ஆ. இந்த மாளிகையில் தேவன் எவ்விதம் வாழ்கின்றார் (எபே. 2:22)?*

*இ. இந்த மாளிகையுடன் கிறிஸ்து எவ்விதம் உறவுபடுத்தப்பட்டுள்ளார் (எபே. 2:20)?*

***3. வேளாண்மை செய்தல் என்பதன் தொடர்பாக, சபை என்னவாக இருக்கின்றது (1 கொரி. 3:9)?***

***4. பற்றுறுதியைப் பொறுத்தமட்டில் சபை என்னவாக உள்ளது (கலா. 6:10)?***

***5. நிறுவன அமைப்பைப் பொறுத்தமட்டில் சபை என்னவாக உள்ளது (எபே. 1:22, 23; கொலோ. 1:18)?***

*அ. கிறிஸ்து சரீரத்துடன் எவ்விதத்தில் உறவுபடுத்தப்படுகின்றார் (கொலோ. 1:18அ)? கிறிஸ்தவர்கள் சரீரத்துடன் எவ்விதம் உறவு படுத்தப்படுகின்றார்கள் (ரோமர் 12:4, 5)?*

*ஆ. சபையில் எவற்றின் மேல் அவர் தலையாக இருக்கின்றார் (எபே. 1:22)?*

*இ. அவருடைய சரீரத்தின் நிறைவு எது (எபே. 1:23)?*

***6. திருமண உறவைப் பொறுத்தமட்டில் சபை என்னவாக உள்ளது (எபே. 5:22-25)?***